**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**
**முன்னிலை :–திருமதி.வே.உதயசூரியா, எம்,எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், நத்தம்.**
**2023 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 03 ம் நாள் செவ்வாய்கிழமை**
**அசல் வழக்கு எண்.58/2018**
**CNR TNDG No.10000452 2018**

A.ஆறுமுகம் .... வாதி

... எதிர் ...

1. N.போதும்பொண்ணு
2.D.பாப்பாத்தி
3.K.சரோஜா
4.R.மலர்
5.A.கணேசன்
6.S.விஜயா
7.S. ராஜ்குமார்
8.S.செல்வராஜ்
9.மைனர் மோனிஷாதேவி
10.மைனர் சுவாதி
11. மைனர் சரவணக்குமார்
12.S. முத்துராஜ் ... பிரதிவாதிகள்

(மேற்படி மைனர் 9 முதல் 11 பிரதிவாதிகள்
தங்களது தகப்பனாரும், கார்டியனுமான
8 வது வாதி மூலம்)

இந்த உரிமையியல் வழக்கானது 29.06.2018 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 03.01.2023 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.L.குமரப்பன், அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஜஹாங்கீர், அவர்கள் முன்னிலையாகியும், 3,4,6,7,8 பிரதிவாதிகள் ஒருதரப்பினராகவும், 9 மற்றும் 11 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.கண்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 12 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.செந்தில்குமார், அவர்கள் முன்னிலையாகியும், வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையின்கீழ் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது வழக்குச் சொத்தில் வாதிக்குரிய 6/20 பாகத்தை நயமிடர் பார்த்து பிரித்து தனித்த சுவாதீனம் கொடுக்கவேண்டுமென பிரதிவாதிகள் மீது ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும், அவ்வாறு பாகம் பிரித்து கொடுக்க தவறும்பட்சத்தில் வாதி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து பாகம்பிரித்து இறுதிநிலை தீர்ப்பாணை பெற அனுமதி வேண்டியும், 1,2 மற்றும் 5 பிரதிவாதிகள் பொம்மகவுண்டரின் உண்மையான வாரிசுகளை மறைத்து O.S.No.90/2017 நம்பர் வழக்கில் வழங்கிய தீர்ப்பாணை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரியும், 1, 2 மற்றும் 5 பிரதிவாதிகள் பொம்மகவுண்டரின் வாரிசுகள் என மோசடியாக பெற்ற 28.03.2018ம் தேதிய வாரிசு சான்று சட்டப்படி செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியும், வழக்குச் சொத்தை பொறுத்து 1,2 மற்றும் 5 பிரதிவாதிகள் 12ம் பிரதிவாதிக்கு 23.04.2018ம் தேதி எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் வாதியின் பாகத்தைப் பொறுத்து செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரியும், வழக்குச் சொத்தை கிரையம் பெற்றதாக கூறும் 12வது பிரதிவாதி அதனை வில்லங்கம் ஏதும் செய்யக்கூடாது என 12ம் பிரதிவாதி மீது ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கின் செலவுத்தொகை கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது வாதி தரப்பில் விசாரணைக்காக பட்டியலில் வந்தபோது வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதி தரப்பு வழக்கறிஞர் வாதி வக்காலத்தை திரும்ப பெற்றுகொண்டுவிட்ட நிலையில், வழக்கு விசாரணைக்காக சிறப்பு பட்டியலில் வந்தபோது வாதி வழக்குவிசாரணையை தொடங்குவதற்கு முன்வராத காரணத்தினால், இவ்வழக்கு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2023 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 03 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V UDAYASURIYA Digitally signed by V UDAYASURIYA Date: 2023.01.03 10:18:51 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**நத்தம்.**